TIP/SS/01/03/02 2017.06.01

**வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/ 2016 (II)**

சனாதிபதி செயலாளர்
பிரதமரின் செயலாளர்
அமைச்சரவையின் செயலாளர்
ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்
அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்டமுறை நிறுவனங்களின் தலைவர்கள் யாவருக்கும்

**சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரத்தை வழங்கும் திட்டம்**

2017 மே மாதம் 02 ஆந் திகதி இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க அரசாங்க சேவையில் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச் சட்டமுறைச் சபைகளில் சேவையாற்றுகின்ற சிரேஷ்ட நிறைவேற்றுத் தரத்திலுள்ள நிருவாக, முகாமைத்துவ மற்றும் தொழில்மை சார்ந்த பதவிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களினால் சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக அல்லது உள்நாட்டில் பொருத்தப்பட்ட மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2016 யூலை 14 ஆந் திகதி வெளியிடப்பட்ட வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/ 2016 இன் 3.10.iii மற்றும் 3.10.v எனும் பந்திகள் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழுள்ள பந்திகள் உட்சேர்க்கப்படுவதுடன் அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும் மாற்றம் இன்றி அவ்வாறே தொடர்ந்தும் செயல்வலுவுடையனதாக நடைமுறையில் இருக்கும்.

இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2017 யூன் 10 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப் பெறுகின்றது. அதன்படி அத்திகதியன்று அல்லது அத்திகதிக்குப் பின்னர் இலங்கைச் சுங்கத்தினால் விடுவிக்கப்படும் வாகனங்களுக்கு மட்டும் இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

**3.10.iii.** சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தி மோட்டார் வாகனமொன்றினை இறக்குமதி செய்யும் போது அல்லது உள்நாட்டில் பொருத்தப்பட்ட மோட்டார் வாகனமொன்றினை கொள்வனவு செய்யும் போது அனுமதிப் பத்திர உரிமையாளரினால் செலுத்தப்பட வேண்டிய மொத்த உற்பத்தி வரி மற்றும் கிடைக்கப்பெறும் வரிச் சலுகை கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| வாகனப் பிரிவு | சீ.ஐ.எப். பெறுமதி (ஐ.அ.டொலர்) | செலுத்த வேண்டிய மொத்த உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரியில் | |
|---|---|---|---|
| | | செலுத்த வேண்டிய வரி | வரிச் சலுகை |
| வாகனப் பிரிவு 1 | 25,000 அல்லது அதற்கு குறைந்த | 35% | 65% |
| வாகனப் பிரிவு 2 | 25,000 இற்கு மேற்பட்டதும் 30,000 இற்கு மேற்படாததும் | 40% | 60% |

உரிய சுங்க குறிப்பேடு (CUSDEC) சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் காணப்படும் வரி விகிதாரங்களினதும் வாகனத்தின் பெறுமதியினதும் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள செலுத்த வேண்டிய வரி கணக்கிடப்படுகின்றது.

**3.10.v.** சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தி பெறப்படுகின்ற மோட்டார் வாகனத்தின் முதல் பதிவானது அனுமதிப் பத்திரம் உரித்தாகின்ற

உத்தியோகத்தர் (அனுமதிப் பத்திர பெறுநர்) பெயரில் மட்டுமே பதிவு செய்யப்படல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட வாகனத்தை வேறொருவருக்கு மாற்றும் போது கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

அ. இச்சுற்றறிக்கையின் 3.10.iii ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆவது வாகனப் பிரிவுக்குட்பட்டதும், முதல் பதிவு அனுமதிப் பத்திர பெறுநரின் பெயரில் செய்யப்பட்டுள்ளதுமான வாகனத்தின் உரிமையை அனுமதிப் பத்திர பெறுநர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெறோருவருக்கு மாற்ற முடியும்.

ஆ. மேலே 3.10.iii ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 2 ஆவது வாகனப் பிரிவுக்குட்பட்டதும், முதல் பதிவு அனுமதிப் பத்திர பெறுநரின் பெயரில் செய்யப்பட்டுள்ளதுமான வாகனத்தின் உரிமையை எந்தவொரு காரணத்தினாலும் (2016 யூலை 14 ஆந் திகதி கொண்ட வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/2016 இன் 3.8 (i), (ii) மற்றும் 3.10 (iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர) முதல் பதிவு திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் முடியும் வரை வேறொருவருக்கு மாற்ற முடியாது.

இ. 2015 நவம்பர் 20 ஆந் திகதி வரை நடைமுறையிலிருந்த வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/2013 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனத்தின் உரிமையை மாற்றுவது சம்பந்தமாக 2014 மார்ச் 25 ஆந் திகதிய வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/(02)2013 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை தொடர்ந்தும் ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும்.

ஈ. 2015 நவம்பர் 20 ஆந் திகதியிலிருந்து 2017 யூன் 09 ஆந் திகதி வரை வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/2016 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்கள் மூலம் பெறப்பட்டு 2017 யூன் 09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கைச் சுங்கத்தினால் விடுவிக்கப்பட்ட வாகனங்களை எந்தவொரு காரணத்தினாலும் (சுற்றறிக்கை இல. 01/2016 இன் 3.8 (i), (ii) மற்றும் 3.10 (iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர) முதல் பதிவு திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் முடியும் வரை வேறொருவருக்கு மாற்ற முடியாது.

(இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்பட வேண்டிய அனுமதிப் பத்திரத்தின் மாதிரி இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது).

**ஒப்பம்./ ஆர்.எச்.எஸ். சமரதுங்க**
**பொதுத் திறைசேரியின் செயலாளர் மற்றும்**
**நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர்**

பிரதிகள்:

01. கணக்காய்வாளர் அதிபதி
02. மத்திய வங்கியின் ஆளுநர்
03. பணிப்பாளர் நாயகம், வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்
04. பணிப்பாளர் நாயகம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
05. பணிப்பாளர் நாயகம், இலங்கை சுங்கம்
06. பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
07. பணிப்பாளர் நாயகம், பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களம்
08. ஆணையாளர் நாயகம், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்
09. ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
10. பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்